/மின்னஞ்சல்/

**மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநரின் செயல்முறைகள், சென்னை – 06.**

**ந.க.எண். 20643/ ஜி3 / 2024,** **நாள் . 24 .10.2024**

பொருள் : தேசிய கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் – தேசிய மக்கள்தொகை கல்வித் திட்டம் – வளரிளம் பருவக் கல்வி தொடர்பான நாட்டுப்புற நடனப் (Folk Dance) போட்டியினை நடத்துதல் –சார்பாக.

பார்வை : 2024 –25 ஆண்டிற்கான மக்கள் தொகை கல்வித் திட்ட ஆண்டுத் திட்டம்.

... ... ...

பார்வையில் காணும் புதுடெல்லி, தேசிய கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் வழிகாட்டுதல் படி. வளரிளம் பருவக் கல்வி சார்ந்த நாட்டுப்புற நடனப் போட்டி அரசு நடுநிலை/ உயர்நிலை/ மேல்நிலைப்பள்ளிகளில் 8–9 ஆம் வகுப்பு பயிலும் மாணவ மாணவியருக்கு நடத்தப்படுகிறது. இந்த ஆண்டும், சென்னை–6 , மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், தெரிவு செய்யப்பட்டுள்ள 1) நீலகிரி 2) மதுரை. 3) தூத்துக்குடி, 4) திருச்சி. 5) வேலூர் மாவட்டங்களில் உள்ள அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 8–9 ஆம் வகுப்பு பயிலும் மாணவ மாணவியருக்கு நாட்டுப்புற நடனப் போட்டியை கீழ்கண்டவாறு நடத்த திட்டமிட்டுள்ளது. இப்போட்டியை பள்ளி அளவிலும், மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் நடத்தப்பட்டு, மாநில அளவில் முதலிடம் பெறும், பள்ளி மாணவர்க்குழு NCERT–ல் நடைபெறவுள்ள, தேசிய அளவிலான போட்டியில் பங்கேற்க வேண்டும்.

| போட்டிகள் | இடம் | நாள் |
|---|---|---|
| பள்ளி அளவில் | அந்தந்தப் பள்ளிகள் | 12.11.2024–க்குள் |
| மாவட்ட அளவில் | அந்தந்த மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் அல்லது ஏதேனும் ஓர் அரசுப் பள்ளி | 22.11.2024–க்குள் |
| மாநில அளவில் | தெரிவு செய்யப்பட்ட மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், | 28.11.2024 |
| தேசிய அளவில் | NCERT, புதுடெல்லி | சனவரி– 2025 |

**மாவட்ட அளவிலான நாட்டுப்புற நடனப் )Folk Dance( போட்டிக்கான செலவின விவரம்**

| விவரம் | கூறுகள் (ஒரு மாவட்டத்திற்கு) |
|---|---|
| மாவட்ட அளவிலான பரிசுத் தொகை (புத்தகங்கள்) | (ரூ. 300 + ரூ. 200 + ரூ. 150) x 6(குழு) = 3900 |
| மாவட்ட அளவிலான நடுவர்கள் மதிப்பூதியம் | 3x (ரூ. 500 ) = ரூ. 1500 |
| நடுவர்கள் சிற்றுண்டி | ரூ.100 /- |

**மாநில அளவிலான நாட்டுப்புற நடனப் )Folk Dance( போட்டிக்கான செலவின விவரம்**

| விவரம் (மாநில அளவிலாவில் நடத்திடும் மாவட்டத்திற்கு) | கூறுகள் | மொத்தம் |
|---|---|---|
| நடுவர்கள் மதிப்பூதியம் மற்றும் பயணப்படி | ரூ. 1000 x 3 | ரூ.3.000/- |
| மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான காலை உணவு, சிற்றுண்டி மற்றும் மதிய உணவு | ரூ. 300 x 40 | ரூ- 12,000/- |
| ஆசிரியர்களுக்கான பயணப்படி மற்றும் தினப்படி | ரூ. 1000 x 10 | ரூ.10000/- |
| மாணவர்களுக்கான பயணப்படி | ரூ.600 x 30 | ரூ.18,000/- |
| மாநில ஒருங்கிணைப்பாளருக்கான பயணப்படி, தினப்படி மற்றும் தங்கும் இடவசதி | ரூ. 5500 x 1 | ரூ.5500/- |
| மாணவர்களுக்கான பரிசுத்தொகை மதிப்பு | ரூ.6000/- | ரூ.6000/- |
| சில்லறை செலவினம் | ரூ.2000/- | ரூ.2000/- |
| | மொத்தம் | ரூ.56,500/- |

**நாட்டுப்புற நடனப் போட்டி கீழ்க்காணும் ஐந்து தலைப்புகளின் அடிப்படையில் நடத்தப்பட வேண்டும்.**

1. மாணவர்களுக்கும் மாணவிகளுக்கும் சமமான வாய்ப்பு
2. குழந்தையின் வளர்ச்சியில் கூட்டுக் குடும்பத்தின் பங்கு
3. சுற்றுச் சூழலைப் பாதுகாத்தல் (குப்பைகளைக் குறைத்தல், மீண்டும் பயன்படுத்துதல் மற்றும் மறுசுழற்சி செய்தல்)
4. போதைப்பொருளின் பயன்பாட்டினைத் தடுத்தல்
5. வளரிளம் பருவத்தில் ஆரோக்கியமான உறவுமுறைகள்

இப்போட்டி தொடர்பான விவரங்கள் அனைத்தும் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

**பள்ளிகள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்**

- நாட்டுப்புற நடனப் போட்டி அரசுப் பள்ளிகளில் 8-9 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு மட்டும் நடத்தப்பட வேண்டும்.
- கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளில் ஏதேனும் ஒன்றைத் தெரிவு செய்து, தலைமை ஆசிரியரால் நியமிக்கப்பட்ட ஆசிரியரின் உதவியுடன், மாணவர்கள் பயிற்சி பெற வேண்டும்.

- பங்கேற்கும் குழுவினர்– ஒரு அணியில் 4 முதல் 6 மாணவ/ மாணவிகள் மட்டும் இடம் பெற வேண்டும்.
- இப்போட்டியில் கலந்து கொள்ளும் மாணவ மாணவிகள் தாங்கள் தெரிவு செய்த தலைப்புக்கேற்றவாறு நாட்டுப்புற நடனத்திற்கான சிறப்பு உடை அலங்காரம், ஒப்பனை ஆகியவற்றை தாங்களே செய்து கொள்ள வேண்டும்.
- பள்ளிகள் நாட்டுப்புற நடனப் போட்டியை அந்தந்தப் பள்ளிகளில் நடத்தி மிகச் சிறந்த ஓர் அணியினை மாவட்ட அளவில் நடைபெறும் போட்டியில் கலந்து கொள்ள ஆசிரியரின் துணையுடன் தலைமை ஆசிரியர் அனுப்பி வைக்க வேண்டும். ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பெண் குழந்தைகள் மற்றும் ஆண் குழந்தைகள் அக்குழுவில் இருந்தால், ஓர் ஆண் ஆசிரியர் மற்றும் ஒரு பெண் ஆசிரியர் மாவட்ட அளவிலான போட்டியில் மாணவ, மாணவிகளை அழைத்துச் செல்ல வேண்டும். இதுபோலவே, மாவட்ட அளவில் முதலிடம் பெறும் அணி, ஆசிரியரின் துணையுடன் மாநில அளவிலான நாட்டுப்புற நடனப் போட்டியில் கலந்து கொள்ளஅறிவுறுத்தப்படுகிறது.
- மாநில அளவிலான நாட்டுப்புற நடனப் போட்டி திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனம் தெரிவு செய்யும் மையத்தில் நடத்தப்படும். வெளியூரிலிருந்து வரும் ஆசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவிகளுக்கு தங்குமிட வசதி (Refresh) ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
- மாவட்ட அளவிலான போட்டிகளில் கலந்து கொள்வதற்காக பயணப்படி வழங்கப்படமாட்டாது.
- மாநில அளவிலான போட்டிகளில் கலந்து கொள்ளும் ஆசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவிகளுக்கு இரயிலில் இரண்டாம் வகுப்பு படுக்கை வசதி / தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கட்டணம் மாநில அளவிலான போட்டி நடைபெறும் மையத்தில் வழங்கப்படும்.

**மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனம் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்**

- மாவட்ட அளவிலான போட்டியை நடத்த இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளவாறு நடுவர்களை நியமித்து, மாவட்ட அளவிலான முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களை முதல்வர் தெரிவு செய்ய வேண்டும்.
- முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களை பெறும் மாணவர்களுக்கான பரிசுப்புத்தகங்கள், நடுவர்கள் மதிப்பூதியம் ஆகியன மாநிலக் கல்வியியயல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் அனுப்பப்பட உள்ள மக்கள் தொகைக் கல்வித்திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட வேண்டும்.
- பரிசு பெறும் மாணவர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் கொடுக்கப்பட்டுள்ள தொகைக்கானப் புத்தகங்களை வழங்க வேண்டும்.
- போட்டியில் பங்கேற்ற பள்ளிகளின் எண்ணிக்கை, பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை, தெரிவு செய்யப்பட்ட தலைப்புகள், பார்வையாளர்களின் எண்ணிக்கை ஆகியவற்றை இந்நிறுவனத்திலிருந்து அனுப்பப்பட உள்ள Google Link–ல் நிரப்ப வேண்டும்.
- மாவட்ட அளவில் முதலிடம் பெறும் அணியின் பெயர்களை, மாநில அளவில் நடத்திடும், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்திற்கு மின்னஞ்சல் மூலம் மாநில அளவிலான போட்டி நடைபெறும் நாளுக்கு முன்னர் அனைத்து

மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்களும் அனுப்பி வைக்க வேண்டும்.

- திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர் இணைப்பில் கொடுக்கப்பட்டவாறு, நடுவர்களை நியமித்து மாநில அளவிலான நாட்டுப்புற நடனப் போட்டியினை நடத்தி முதல், இரண்டு மற்றும் மூன்றாம் இடங்களை தெரிவு செய்ய வேண்டும்.

எனவே, இப்போட்டியினை நடத்துவதற்கான இயக்குநரின் செயல்முறைகள் அனைத்து அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளுக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது. மேலும், இப்போட்டி மாணவர்களிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்தும் நோக்கில் நடத்தப்படுவதால் அனைத்து அரசுப்பள்ளித் தலைமையாசிரியர்களும், இப்போட்டிக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் முதன்மைக் கல்வி அலுவலர்கள் அவர்களை ஊக்குவிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும், இப்போட்டியை சிறப்பாக நடத்திமுடித்து, இரசீதுகளையும் மீதமுள்ள தொகையினையும், இயக்குநர், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் அவர்களுக்கு போட்டி நடத்தி முடித்த உடன் அனுப்பி வைக்குமாறு அனைத்து மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவன முதல்வர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு- **(1)**

**இயக்குநர்**

**பெறுநர்**

சார்ந்த முதன்மைக் கல்வி அலுவலர்கள் / சார்ந்த மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்கள்.

**நகல்**

இந்நிறுவன ஒருங்கிணைப்பாளர் (மா.ப) முனைவர். N. சத்தி, உதவிப் பேராசிரியர், மாநில அளவிலான போட்டிக்காக பணிக்கப்படுகிறார்.

**நகல்**

1. இயக்குநர், பள்ளிக் கல்வி இயக்ககம், சென்னை-6-அவர்களுக்கு மேல்நடவடிக்கைக்காகக் கனிவுடன் அனுப்பப்படுகிறது.
2. இயக்குநர், தொடக்கக் ககல்வி இயக்ககம், சென்னை-6-அவர்களுக்கு மேல்நடவடிக்கைக்காகக் கனிவுடன் அனுப்பப்படுகிறது
3. அரசுச் செயலர், பள்ளிக் கல்வித் துறை, தலைமைச் செயலகம், சென்னை-09, அவர்களுக்கு தகவலுக்காக பணிவுடன் அனுப்பப்படுகிறது.

## இணைப்பு-1

### நாட்டுப்புற நடனப் (Folk Dance) போட்டி தொடர்பான விவரங்கள்

- போட்டிகளை மதிப்பீடு செய்யும் நடுவர்கள் நியமனம்

| போட்டிகள் | நடுவர்கள் |
|---|---|
| பள்ளி அளவு | அந்தந்தப் பள்ளித் தலைமையாசிரியர், இரண்டு ஆசிரியர்கள் (தலைமை ஆசிரியரின் பரிந்துரையின் படி) |
| மாவட்ட அளவு | மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர், வளரிளம் பருவக் கல்வியில் அனுபவம் உள்ள போட்டியில் பங்குபெறாத ஒரு பள்ளியின் தலைமை ஆசிரியர், நிகழ்த்துக் கலைகளில் அனுபவம் மிக்கவர் ஒருவர் |
| மாநில அளவு | வளரிளம் பருவக் கல்வி வல்லுநர், கல்வியாளர், நிகழ்த்துக் கலைகளில் அனுபவம் மிக்கவர் |
| **நாட்டுப்புற நடன போட்டிக்கான கால அட்டவணை** நேரம் – 5 –6 நிமிடங்கள் மட்டும் | |

- **நாட்டுப்புற நடனப் போட்டியின் உட்கூறுகளின் மதிப்பெண் பங்கீடு**

| வ. எண். | உட்கூறுகள் | மதிப்பெண் |
|---|---|---|
| 1 | தலைப்பைச் சரியாக புரிந்து கொண்டு வெளிப்படுத்துதல் | 25 |
| 2 | நாட்டுப்புற நடனத்தை சிறப்பாக நடத்துதல் (ஒப்பனை, ராகம், தாளம், நடன அமைப்பு) | 20 |
| 3 | வாழ்வியல் திறன்களின் வெளிப்பாடு | 35 |
| 4 | பார்வையாளர்கள் கேட்கும் வினாக்களுக்கு சரியாக பதில் அளித்தல் | 10 |
| 5 | குழுவினர் நாட்டுப்புற நடனக் கருத்தை தொகுத்து வழங்குதல் | 10 |
| | மொத்தம் | 100 |

- மாநில அளவிலான போட்டி நடத்திடும் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், இப்போட்டிக்காக வெளியூரிலிருந்து வருகை புரியும் மாணக்கர்கள்/ ஆசிரியர்களுக்குத் தேவையான தங்குமிட வசதி **(Refresh)** ஏற்பாடுகள் செய்யப்பட்ட வேண்டும்.
- மாவட்ட அளவிலான போட்டிகளில் கலந்து கொள்வதற்காக பயணப்படி வழங்கப்படமாட்டாது.
- மாநில அளவிலான போட்டிகளில் கலந்து கொள்ளும் ஆசிரியர்கள் (அரசு ஊழியர்களுக்கான பயணப்படி விதிகள் **(G.o. Ms.No.307 Finance pay cell Department Dated.13.10.2017)** ன்படி இரயில் இரண்டாம் வகுப்பு படுக்கை வசதி அனுமதிக்கப்பட்டும்.
- மாநில அளவிலான போட்டியில் கலந்து கொள்ளும் ஆசிரியர் தனியாகவும் மாணவர்கள் தனியாகவும் பயணிக்க இயலாது என்பதால், ஆசிரியருக்கு பயணப்படி விதிகளின்படி அனுமதிக்கப்பட்டுள்ளவாறு, **போட்டியில் பங்கேற்க்கும்** மாணவ, மாணவிகளுக்கு இரயிலில் இரண்டாம் வகுப்பு படுக்கை வசதி அல்லது தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கட்டணம், மாநில அளவிலான போட்டி நடைபெறும் மையத்தில் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இயக்குநர்

28/10/2024